செ.வெ.எண்: 17 – 2020 நாள்:11.07.2020

**விழுப்புரம் நகராட்சி ஜீ.ஆர்.பி. தெருவில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (11.07.2020) விழுப்புரம் நகராட்சி ஜீ.ஆர்.பி. தெருவில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் தினந்தோறும் காலை, மதியம் மற்றும் மாலை ஆகிய மூன்று வேலையும் கிருமி தெளிக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், அப்பகுதிகளில் வசிப்பவர்கள் மற்ற பகுதிகளுக்கு செல்லாமலும் மற்ற பகுதிகளை சேர்ந்தவர்கள் அப்பகுதிக்கு செல்லாமலும் இருக்க தடுப்பு கட்டைகள் ஏற்படுத்தி கண்காணிக்கும் பணிகளையும், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் வசிக்கும் குடும்பத்தினருக்கு தேவையான அத்தியாவசியப்பொருட்களை நகராட்சி நிர்வாக மூலம் அவரவர் வீட்டிற்கே நேரில் சென்று வழங்கப்படுகிறதா என்றும், நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் ஒலிப்பெருக்கி வாகனத்தின் வாயிலாக கொரோனா நோய் தடுப்பு சம்மந்தமான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறதா என்பதையும், நோய் தொற்று பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் அனைவருக்கும் சளி, இருமல் மற்றும் காய்ச்சல் சம்மந்தமான அறிகுறிகள் கண்டறியப்படுகிறதா என்பதனையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.**